தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சில இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் புதன்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகம், புதுவையின் கடலோர மாவட்டங்களில் பரவலான மழை பெய்யும். உள்மாவட்டங் களில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் சென்னை மீனம்பாக்கம், நாகப்பட்டினம், புதுச்சேரி, கடலூர், அதிராமப்பட்டினம் ஆகிய பகுதிகளில் லேசான மழை பதிவானது.

### வடகிழக்குப் பருவமழை: தமிழகத்தில் இதுவரை சராசரி 4 மாவட்டங்களில் கூடுதல் மழை

தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை இதுவரை சராசரியாக பெய்துள்ளது. தமிழகத்தில் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் வடகிழக்குப் பருவமழைக் காலம் என்றழைக்கப் படுகிறது. தமிழகத்துக்கு அதிக மழை இந்தப் பருவ காலத்தில்தான் கிடைக்கிறது. தென்மேற்கு பருவமழைக் காலத்தில் நாடு முழுவதும் மழை பெய்யும். ஆனால், தமிழகத்தின் ஓரிரு மாவட்டங்களைத் தவிர பிற பகுதிகளில் மழை இருக்காது.இதனால், தமிழகத்தின் தண்ணீர் தேவை வடகிழக்குப் பருவமழையை நம்பியே உள்ளது. இந்த நிலையில், கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் பொய்த்தது. கடந்த ஆண்டு சராசரி மழையைக் காட்டிலும் 33 சதவீதம் குறைவான மழையே தமிழகத்தில் பெய்தது. அதற்கு முந்தைய 2012-ஆம் ஆண்டிலும் பற்றாக்குறை மழையே பெய்தது. இந்த நிலையில், இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை சராசரியாக இருக்கும் என்று வானிலை ஆய்வு

மைய அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்திருந்தனர். அதற்கேற்றவாறு, இந்த ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி வரை சராசரி மழை பதிவாகியுள்ளது. அக்டோபர் 1-ஆம் தேதி முதல் டிசம்பர் 10-ஆம் தேதி வரையிலான காலத்தில் தமிழகத்தில் சராசரியாக 397.1 மி.மீ. மழை பெய்யவேண்டும். இதில் 370.5 மி.மீ. மழை பெய்துள்ளது. இது 7 சதவீதம் குறைவாகும். ஆனாலும், வானிலை ஆய்வு மைய கணக்கின்படி இது சராசரியான மழையாகும். அதேபோல, புதுவையில் சராசரியாக 782.9 மி.மீ. மழை பெய்யும். ஆனால் 678.6 மி.மீ. மழை பெய்துள்ளது. இது 14 சதவீத குறைவாகும். ஆனால், இந்த அளவு சராசரி அளவு என்று கணக்கிடப்படுகிறது. தமிழகத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி, ராமநாதபுரம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிக மழை பெய்துள்ளது. ஆனால் அரியலூர், காஞ்சிபுரம், மதுரை, பெரம்பலூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் பற்றாக்குறையான மழையே பெய்துள்ளது. பிற மாவட்டங்களில் சராசரியான அளவில் மழை பெய்துள்ளது. கடந்த ஒரு வாரமாக மழை குறைந்து வந்த நிலையில், தற்போது வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**அக்டோபர் 1 முதல் டிசம்பர் 10-ஆம் தேதி வரை மாவட்ட வாரியாக பெய்த மழை அளவு (மி.மீ.)**

மாவட்டம் பெய்த சராசரி வித்தியாச மழை மழை சதவீதம்

அரியலூர் 279.6 476.5 -41 (பற்றாக்குறை)

சென்னை 578.5 714.3 -19 (சராசரி)

கோவை 281.4 307.3 -8 (சராசரி)

கடலூர் 563.7 613.3 -8 (சராசரி)

தருமபுரி 330.1 310.9 6 (சராசரி)

திண்டுக்கல் 388.1 387.8 சமம் (சராசரி)

ஈரோடு 379.5 296 28 (கூடுதல்)

காஞ்சிபுரம் 336.6 583.5 -42 (பற்றாக்குறை)

கன்னியாகுமரி 456.3 463.7 -2 (சராசரி)

கரூர் 243.7 290.6 -16 (சராசரி)

கிருஷ்ணகிரி 246.7 274.3 -10 (சராசரி)

மதுரை 304.7 384.3 -21 (பற்றாக்குறை)

நாகப்பட்டிணம் 842.9 798.9 6 (சராசரி)

நாமக்கல் 240.2 277 -13 (சராசரி)

நீலகிரி 512.8 439.5 17 (சராசரி)

பெரம்பலூர் 304.8 398.1 -23 (பற்றாக்குறை)

புதுக்கோட்டை 319.9 357.9 -11 (சராசரி)

ராமநாதபுரம் 545.3 427.7 28 (கூடுதல்)

சேலம் 307.9 348.2 -12 (சராசரி)

சிவகங்கை 408.2 374 9 (சராசரி)

தஞ்சாவூர் 426 483.1 -12 (சராசரி)

தேனி 360.9 329.1 10 (சராசரி)

திருநெல்வேலி 709.3 406 75 (கூடுதல்)

திருப்பூர் 311.7 292.8 6 (சராசரி)

திருவள்ளூர் 381.8 537.4 -29 (பற்றாக்குறை)

திருவண்ணாமலை 189.6 409.7 -54 (பற்றாக்குறை)

திருவாரூர் 607 618.5 -2 (சராசரி)

தூத்துக்குடி 525.2 375.6 40 (கூடுதல்)

திருச்சி 224.2 354.5 -37 (பற்றாக்குறை)

வேலூர் 159.9 324.2 -51 (பற்றாக்குறை)

விழுப்புரம் 343.5 441.9 -22 (பற்றாக்குறை)

விருதுநகர் 282.2 382.6 -26 (பற்றாக்குறை)

தமிழ்நாடு 370.5 397.1 -7 (சராசரி)

காரைக்கால் 796.3 869.7 -8 (சராசரி)

புதுச்சேரி (நகரம்) 605.1 735.5 -18 (சராசரி)

புதுவை (மாநிலம்) 672.6 782.9 -14 (சராசரி)

## வேளாண் இயந்திரங்கள் வாங்க 50 சதவீதம் மானியம்: ஆட்சியர் அறிவிப்பு

வேளாண் இயந்திரங்கள் வாங்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரை மானியம் அளிக்கப்படுவதாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வி.கே. சண்முகம் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

வேளாண்மையில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கூடுதலாக பண்ணை சக்தியை வழங்கவும், வேளாண் தொழிலாளர்கள்

பற்றாக்குறையை ஈடு செய்யவும், பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடவும் முடியும். அதன்படி விவசாயிகளுக்கு உழவு இயந்திரம், மண் தள்ளும் இயந்திரம், கதிர் அறுக்கும் இயந்திரம், பண்ணைக் கருவி வாங்குவதற்கு 50 சதவீத மானியம், அதிகபட்சமாக ரூ. 4 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நில மேம்பாட்டுத் திட்டம், சிறுபாசனத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம், சூரிய மின் இறைப்பான்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகவல், கல்விப் பரிமாற்றப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2-ஆம் பசுமைப் புரட்சியை ஊக்குவிக்கும் வகையிலும், மின்சார சேமிப்பை அதிகரிக்கும் வகையிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 80 சதவீத மானியத்தில் விவசாய நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2014-15-ஆம் ஆண்டில் 70 சூரிய இறைப்பான்கள் நிறுவ திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் நன்னீர்ப் பாசன அமைப்பை இணைத்து விவசாயிகள் வருமானத்தை மும்மடங்காகப் பெருக்க வழிவகை செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளை விஞ்ஞானிகளாக்க முயற்சி; நம்பியூரில் பண்ணைப்பள்ளி செயல்விளக்கம்**

கோபி : விவசாயிகளை விஞ்ஞானிகளாக்கும் பண்ணைப்பள்ளி திட்டத்தை, கோபி நம்பியூர் பகுதியில், வேளாண் துறை சார்பில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த, 20 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழக விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில், நெல்

சாகுபடி செய்கின்றனர். மருந்து தெளிக்காமல் பூச்சி நோய்களை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம், வேளாண் துறைக்கு ஏற்பட்டது. பயிரை பராமரிப்பது குறித்து, மரபு ரீதியான சிந்தனைகளை, விவசாயி களிடம் மாற்றி அமைக்க வந்ததுதான், உழவர் வயல்வெளிப்பள்ளிகள் அல்லது பண்ணைப்பள்ளி என்பர்.இதன் மூலம், பயிரின் விதைப்பு முதல் அறுவடை வரையிலான நிலைகள், கட்டுப்படுத்தும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்படும்.கோபி அடுத்த நம்பியூர் பகுதி நஞ்சை நிலங்களில், 2,000 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நம்பியூர் அருகே நடுப்பாளையம் என்ற கிராமத்தில், வேளாண் துறை சார்பில், விவசாயிகளை விஞ்ஞானிகளாக்கும் விதமாக, நெல் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பண்ணைப்பள்ளி குறித்த பயிற்சி, நேற்று நடந்தது. வேளாண் இணை இணை இயக்குனர் செல்வராஜ் தலைமையில், பயிற்சி அளிக்கப்பட்டது.தேவையற்ற மருந்துகளை நெற்பயிர்களுக்கு தெளிப்பதால், தீமை ஏற்படும். வயல்களில், பூச்சிகளை வலை கொண்டு பிடித்து, அதில் பயிர்களுக்கு நன்மை, தீமை அளிக்கும் பூச்சிகளை கண்டறிந்தனர்.இணை இயக்குனர் செல்வராஜ், நிருபர்களிடம் கூறுகையில், ஈரோடு மாவட்டத்தில், வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை (ஆட்மா) திட்டத்தில், 14 யூனியனிலும், பண்ணைப்பள்ளி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் விஞ்ஞானிகளாக்கும் வகையில், ஒவ்வொரு திங்கட்கிழமையும் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. காலை, 8 மணிக்குள் விவசாயிகள், தங்கள் நெல் வயல்களில் இறங்கி, நெல்லுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் எது, தீமைகள் செய்யும் பூச்சிகள் எது கண்டறிந்து, அதை கட்டுப்படுத்தும் முறைகளை, அவர்களே தீர்மானம் செய்வார்கள். நடவு முதல் அறுவடை வரை, ஆறு வகுப்புகள் நடத்தப்படும், என்றார்.அம்மா பண்ணை மகளிர் குழுவினர் கூறுகையில், வயல்வெளி பள்ளி தொடர்ந்து, மூன்று

வாரங்களாக பயிற்சி அளிக்கின்றனர். இதுவரையில் பயிருக்கு என்னவிதமான நோய் எனத்தெரியாமல், கடையில் சென்று மருத்து வாங்கி தெளித்தோம். நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் குறித்து விளக்கம் அளித்ததால், அதற்குண்டான மருத்துகள் வாங்க உதவியாக இருந்தது, என்றனர்.

## நாட்டின் நீர் தேவையை பூர்த்தி செய்து சீனா சாதனை: ரூ.5 லட்சம் கோடி மதிப்பிலான திட்டம் நிறைவேறியது

பீஜிங்: நாட்டின் நீர் தேவையை பூர்த்தி செய்யும், 1,400 கி.மீ., நீள, 5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கனவு திட்டத்தை, சீனா எட்டு ஆண்டுகளில் நிறைவு செய்து சாதனை படைத்துள்ளது. சீனாவின் இந்த சாதனை உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. சீனாவின் தென் பகுதியில் அமைந்துள்ள யங்டெஸ் நதியிலிருந்து நாட்டின் மற்ற பகுதிகளுக்கு தேவையான நீர் ஆதாரத்தை பூர்த்தி செய்ய அந்நாட்டு அரசு திட்டமிட்டது. தென் பகுதியில் உள்ள இந்த நதியின் நீரை, வட பகுதிகளுக்கு கொண்டு செல்வதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் இருப்பதாக, நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர். எனினும், பல கட்ட ஆய்வுகளுக்குப் பின், பூமிக்கு அடியில் பிரமாண்ட குழாய்கள் அமைத்து, அதன் மூலம், வட பகுதிக்கு நீரை எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டது. 2003ல், 3.75 லட்சம் கோடி ரூபாய் செலவில் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. அந்நாட்டு அரசு இதற்கு முழு ஒப்புதல் அளித்ததுடன், முழு தொகையையும் ஒதுக்கி, உடனடியாக பணியை தொடங்க உத்தரவிட்டது. இதையடுத்து, 2005ல் இதற்கான பணிகள் முழு வீச்சில் தொடங்கியது. அந்நாட்டின் மிகப் பெரிய நதியான, யங்டெஸ் நதிக்கரையில் தொடங்கிய பணிகள், பல்வேறு வழித்தடங்கள் வழியாக, 1,400 கி.மீ., தூரத்திற்கு நீர் கொண்டு செல்லும் வழித்தடங்கள் அமைக்கப்பட்டன. இதில், மஞ்சள் நதிக்கரையில் அமைக்கப்பட்டுள்ள, 4,000 மீட்டர் நீளத்திலான, இரு குகைப் பாதை வழித்தடங்களும்

அடங்கும். இதன் மூலம், நாட்டின் அனைத்து பகுதிகளின் நீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் என அந்நாட்டு அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். நீர் வளத் திட்டத்தில்,, அந்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய சாதனை இதுவாகும். இதற்கு முன், மிகப் பெரிய அணைகளை கட்டி, அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்தினர். அதன் மூலம், உலக நாடுகளின் பார்வை சீனாவின் பக்கம் திரும்பியது. இந்நிலையில், நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் நீரை கொண்டு சேர்க்கும் மகத்தான திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதற்கு, உலக நாடுகள் பாராட்டு தெரிவித்துள்ளன. இத்திட்டம் குறித்து, 1952லேயே அந்நாட்டு அரசும், உயர் அதிகாரிகளும் ஆலோசனை நடத்தினர். எனினும், நடைமுறை சிக்கல்கள் மற்றும் பொருள் தேவையின் காரணமாக இத்திட்டத்தை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின், அந்நாட்டு அரசு, சிறந்த பொறியாளர்களைக் கொண்டு, இத்திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்தது. அதன் மூலம், 2003ல் இத்திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து மீண்டும் ஆலோசிக்கப்பட்டது. கடந்த, 2003ல் பீஜிங் சென்றிருந்த தற்போதைய மத்திய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு, நதிகள் இணைப்பு திட்டம் குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். ஆனால், பல்வேறு நடைமுறை சிக்கல்களால், நம் நாட்டில் நதிகள் இணைப்பு திட்டம் இன்று வரை நிறைவேற்றப்படாமல் உள்ளது. சீனாவின் இந்த சாதனையின் மூலம் நதிகள் இணைப்பு சாத்தியமே என்பது நிரூபணமாகியுள்ளது.

## ராமநாதபுரத்திற்கு ஏற்ற நோனிப்பழ சாகுபடி



ராமநாதபுரம் மாவட்டம் வறட்சியான பகுதி என புனையப்பட்டுள்ளதே தவிர, உண்மை நிலை அப்படியில்லை. இங்கு மா, கொய்யா, அன்னாசி,

சப்போட்டா,சீத்தா, பப்பாளி, வாழை என ஏராளமான பழங்கள் விளைகின்றன. காரணம் மண் வளமானதாக இருப்பதே. தண்ணீர், இயற்கை உரம், நல்ல பராமரிப்பு இருந்தால், ராமநாதபுரம் மண்ணில் வெளிநாட்டு பழங்களைக் கூட விளைவிக்க முடியும். இதற்கு உதாரணம், திருப்புல்லாணி அருகே நம்பியான் வலசை கிராமத்தில் விளைந்துள்ள "நோனி' என்ற அபூர்வ வகை பழங்கள். தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக"நோனி' பழக்கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளது. இதன் வேர், தென்னை மரத்தின் பக்கவாட்டு வேர்களில் இணைந்து அதற்கு தேவையான சத்துக்களை தருவதால், தென்னையின் வளர்ச்சியும் நன்றாக உள்ளது. 6 வகை ருசி: "நோனி' பழத்தின் பூர்வீகம் ஆஸ்திரேலியா, மொரீஷியஸ் நாடுகள். இதன் கன்றுகள் நட்டு வைத்த 11 மாதத்தில் பலன் தரும். இதற்கு பஞ்சகவ்யம், இயற்கை உரங்கள் மட்டுமே தேவை. இப்பழத்தை முகர்ந்து பார்த்தால் துத்தநாகம் போன்று ஒருவித ரசாயன வாசனையுடன் இருக்கும். அதில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு, காரம் ஆகிய சுவை உள்ளது. 5 வருடங்கள் வளர்ந்த செடியில் இருந்து பறிக்கப்படும் பழங்கள் முழுவதும் மருத்துவத்திற்கு பயன்படுகிறது. இப்பழங்களை பறித்த 5 மணி நேரத்திற்குள் பெரிய டிரம்களில் போட்டு, 22 நாட்கள் மூடி, இருட்டறையில் வைக்க வேண்டும். பின்னர் கலவை இயந்திரத்தில் போட்டு அரைத்து 3 முறை வடிகட்ட வேண்டும். களி மாதிரி வரும் இதனுடன் 14 நாட்களுக்கு பிறகு நெல்லிக்காய் பொடி சேர்த்தால் திரவ வடிவத்திற்கு மாறி விடும். அதை"ஜூஸ்' ஆக எடுத்து, "டானிக்' தயாரிக்கலாம். இந்த பழங்களை நன்கு காய வைத்து பொடியாக்கி, அதனுடன் "டிஸ்டிலரி வாட்டர்', தேன், காளான் பவுடர், கடற்பாசி சேர்த்தும் உபயோகிக்கலாம். சத்துக்களும், பயன்களும்: இந்த பழத்தில் வைட்டமின் - ஏ, இரும்பு, கால்சியம், சோடியம், பொட்டாசியம் சத்துக்கள் அதிகம் உள்ளன. இது மஞ்சள் காமாலை, சிறுநீரக கோளாறுக்கு சிறந்த மருந்து. மேலும், மூளைக்கு

செல்லும் ரத்தத்தை சுத்திகரிக்கும். உடலில் உள்ள சளியை, மலத்துடன் வெளியேற்றி விடும். ஆஸ்துமாவை குணப்படுத்தும். மாரடைப்புக்கு காரணமான ரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை தடுத்து, உயிர் காக்கும் சிறந்த மாமருந்து. இதற்கு செம்மண் கலந்த மணல் பகுதியே ஏற்ற இடம். நடவு செய்யும்போது பெய்யும் சிறிதளவு மழையே போதும். அதன்பிறகு கடலோர உப்பு நீரிலும் நன்கு விளையும். இதன் மகத்துவம் தெரியாததால் விவசாயிகள் இப்பழக்கன்றுகளை விளைவிக்க முன்வரவில்லை. திராட்சை, ஏலக்காய், தேயிலை, காபி போன்று ராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஏற்ற பணப்பயிர் நோனிப்பழ சாகுபடி தான். **- சந்தவழியான் சித்தமருத்துவர், திருப்புல்லாணி 97878 89903**

## நவீன தொழில்நுட்பம்



**கழிவு நீரிலிருந்து மின் உற்பத்தி** : நமது நாட்டிலுள்ள நகரங்களில் கிடைக்கும் கழிவுகளிலிருந்து 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க முடியும் என கண்டறியப்பட்டுள்ளது. உயர்வேக எரிவாயு நுட்பம்: இந்தியாவில் 1950 முதல் வளியற்ற நுண்ணுயிர்கள் மூலம் உயர்வேக எரிவாயு உருவாக்கும் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டு வருகிறது. தொழில்நுட்பத்தின் செயல்பாடு : உயர்வேக கூட்டு கலன் என்பது மேல் செல்லும் வளியற்ற திடப்படுக்கை அடைப்புடன் நிலையினை நெகிழி கலன்களின் கூட்டு கலவையாகும். இதன் மூலம் வளியற்ற பகுதியில் வாடும் நுண்ணுயிர்கள் குறிப்பாக நுண்ணுயிர்கள், உயிர்ச்சுருள் அளவில் வரை மிகவும் ஏதுவாகின்றது. இத்தகைய வட்டு வளியற்ற திடப்படுக்கை அமைப்பு பல்வேறு தொழிற்சாலை நீர்கழிவுகள் நன்கு மாசு நீக்கு தன்மை பெற்றுள்ளன. "தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கண்டுபிடிப்பு : வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள உயிர் சக்தி துறையில் மேற்கொள்ளப்பட்ட

ஆராய்ச்சியின் விளைவாக எளிய முறையில் அமைக்க கூடிய உயர்வேக எரிவாயு கலன் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த கலன் காகித ஆலைகள், சவ்வரிசி தொழிற்சாலைகள், பால்பதனிடும் பால்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்து வெளிவரும் கழிவுநீரை சுத்திகரிக்க மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது. இந்த தொழிற்சாலை களை சுமார் 70 - 90 சதம் வரை கழிவு நீரிலிருந்து கழிவுகள் சுத்தம் செய்யப்படுவதுடன் 60 -70 சதம் உள்ள மீதேன் எரிவாயும் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிற்சாலைகளில் ஆற்றல் தேவையில் 40 முதல் 100 சதம் வரை பூர்த்தி செய்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் 700க்கும் மேற்பட்ட சவ்வரிசி தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவைகளில் சுமார் 50 தொழிற்சாலைகளை மட்டும் பெரிய அளவிலான எரிவாயு கலன்களைக் கொண்டு மீத்தேன் வாயு உற்பத்தி செய்யும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. மேலும் சுமார் 100 முதல் 150 தொழிற்சாலைகளில் மட்டும் திறந்தவெளி தொட்டிகளில் கழிவுநீர் சேமிக்கப்பட்டு மீத்தேன் வாயு சேகரிக்கும் கலன்கள் அமைந்துள்ளன. சில தொழிற்சாலைகள் கழிவு நீரினை மறு சுழற்சி முறையில் சுத்திகரிப்பு செய்கின்றன. இந்த கலன்களின் மூலமாக சுத்திகரிக்கும் பொழுது கிடைக்கும் கழிவுநீரின் அளவிற்கேற்ப நாள் ஒன்றுக்கு 5 முதல் 2000 கன மீட்டர் எரிவாயுவை உற்பத்தி செய்து, 1 கிலோ வாட்ஸ் முதல் 250 கிலோ வாட்ஸ் வரை மின்உற்பத்தி செய்யலாம். இதேபோல் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைந்துள்ள உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவு நீரிலிருந்தும் மின்சாரம் தயாரிக்க முடியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள ரப்பர் தொழிற்சாலைகளில் கழிவுநீர் வெளிப்பாடு பெரும் பிரச்னையாக இருப்பதால் இத்தொழில்நுட்பம் மூலம் நிவாரணம் பெற முடியும். இவ்வாறு கழிவுநீரை சுத்திகரிக்கும் பொழுது, ஏற்கனவே மிகுந்த மின்சாரத்தை செலவழித்து இயக்கப்படும் சுத்திகரிப்பானின் இயக்கம் நிறுத்தப்படுவதால், அந்த மின்சாரத் தேவையும் தவிர்க்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த கலனில் தேங்கும் திடப்பொருளும் வெளியேற்றப்பட்டு சிறந்த இயற்கை உரமாகவும் பயன்படுகிறது. உயர்வேக எரிவாயு உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தில் நகரக்கழிவு, பல்வேறு வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளின் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்வதுடன் சிறந்த பலனாக எரிவாயு சக்தியைப் பெற்று மின்சாரமும் உற்பத்தி செய்ய முடிகின்றது. இத்தகைய தொழில்நுட்பம் கழிவு நீரில் மாசு நீக்கும் தொழில்நுட்பமாகவும், அதே நேரத்தில் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லாத தொழில்நுட்பமாகவும் விளைகிறது. எனவே இத்தகைய தொழில் நுட்பத்தினை எளிதில் உபயோகித்து சிறந்த பலனைப் பெற முடியும். தகவல் : முனைவர் செள.காமராஜ், உயிர்சக்தி துறை, வேளாண் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422 - 661 1276.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>இயற்கை வேளாண்மை ஒரு கண்ணோட்டம்</u>

**இயற்கை வேளாண்மையில் பூச்சி நோய் நிர்வாகம்**: பூச்சி நோய்கள் தாக்காத இரகங்களை தேர்வு செய்து பயிரிட வேண்டும். சரியான விதைக்கும் பருவத்தில் விதைப்பதினால் பூச்சி, நோய் தாக்குதல் தவிர்க்கலாம். பயிர் சுழற்சி மற்றும் பல்வேறு மாற்றுப்பயிர்களை தேர்வு செய்வதன் மூலமும் பூச்சிகளின் தாக்குதலை குறைக்க முடியும். இனக்கவர்ச்சி பொறி மற்றும் இதர பூச்சிப்பொறிகளை வைத்தும் பூச்சிகளை கட்டப்படுத்தலாம். இயற்கை வேளாண் முறையில் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் பூச்சி, நோய் தாக்குதலை சமாளித்து வளரக்கூடியதாக உள்ளது. மேலும் மண் மூலமாக பரவும் நோய்களின் தாக்குதலும் இயற்கை வேளாண் சாகுபடி நிலங்களில் குறைவாகவே உள்ளது. **இயற்கை வேளாண்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்**: இயற்கை வேளாண்மையில் பல்வேறுவிதமான நன்மைகள் சுற்றுச்சூழலுக்கு கிடைக்கிறது. இயற்கை வேளாண்மை செய்யப்படும்

நிலத்தில் உள்ள அங்ககப் பொருட்கள் அதிக அளவில் இருப்பதால் மண்வளம் பராமரிக்கப்பட்டு மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடுகள் அதிக அளவில் இருக்கும். இதனால் மண்ணின் அமைப்பு மேம்படுவதுடன் பயிர்ச்சத்துக்கள் நன்முறையில் பயிர்களுக்கு கிடைக்கிறது. சாதாரண சாகுபடி முறையினை விட இயற்கை வேளாண்மையில் நீர்வளம் மற்றும் நிலம் மாசுபடுதல் குறைவு. பல்வேறு விதமான பயிர்கள் , பயிர் மரபியல் வளங்கள் இயற்கை வேளாண்மையில் அதிகம் உள்ளன. இயற்கை வேளாண்மையினால் பறவைகள் மற்றும் சிறுபிராணிகளுக்கு வேண்டிய உணவுப்பொருட்கள் தேவையான அளவில் கிடைக்கிறது. இயற்கை வேளாண்மையினால் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள் இதர உயிரினங்களின் பெருக்கம் சமநிலைப்படுகிறது. இயற்கை வேளாண்மை யினால் சுற்றுச்சூழலைப்பாதிக்கும் பசுமைக்குடில் வாயுக்கள் வெளியாவது தடுக்கப்பட்டு பருவநிலை மாறுபாட்டின் தாக்கம் குறைகிறது. இயற்கை வேளாண்மையில் அங்ககப் பொருட்களின் சுழற்சி மற்றும் பயிர்ச்சத்துக்களின் உபயோகம் முறைப்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல் கரியமில வாயுவின் அளவு அதிகரிப்பதில்லை. இயற்கை வேளாண்மை முறைகள் மண்ணின் வளம், மண்ணின் அமைப்பு மற்றும் நீர்பிடிப்புத்திறனை மேம்படுத்துவதினால் நிலமானது தரிசாகாமல் என்றென்றும் பசுமையாக இருந்து பலன் அளிக்க வல்லதாக இருப்பதற்கு உதவுகிறது. எனவே, விவசாயப் பெருமக்கள் ஏதேனும் ஒரு வகையில் பயிர் சாகுபடியில் இயற்கை இடுபொருட்களின் (2-ம்) பசுந்தாள் உரப்பயிர்கள், மண்புழு உரம், கம்போஸ்ட், வேளாண் தொழிற்சாலைக் கழிவுகள்) பயன்பாட்டினை அதிகரித்து மண்வளத்தைக் காத்து பயன்பெற வேண்டுகிறோம். **- முனைவர் து. செந்திவேல் பேராசிரியர் (உழவியல்) காந்திகிராமம் - 624 302. திண்டுக்கல் மாவட்டம். 94435 70103**

## தொடர் மழையால் நிரம்பியது திருக்கோவிலூர் ஏரி

திருக்கோவிலூர்: தொடர் மழை காரணமாக திருக்கோவிலூர் ஏரி நிரம்பி, ரம்யமாக காட்சியளிக்கிறது. திருக்கோவிலூர் பகுதியில் கடந்த 13ம் தேதி பெய்த பலத்த மழை காரணமாக தென்பெண்ணையில் வரத்து அதிகரித்து, பெரிய ஏரிக்கு தண்ணீர் வரத்துவங்கியது. நேற்றும் மழை நீடித்ததால் ஏரிக்கு வரும் தண்ணீரின் அளவு மேலும் அதிகரித்தது. இதனால் ஏரி தனது 75 சதவீத கொள் ளவை எட்டியது. மேக மூட்டத்துடன் லேசான சாரல் மழையில், ஏரி தண்ணீர் ரம்யமாக காட்சியளித்தது. ஏரி முழு கொள்ளவை எட்டியவுடன் வழியும் உபரிநீர் மூலம் மேலும் பல ஏரிகளுக்கு தண்ணீர் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நகரில் உள்ள தெப்பக்குளம், தீர்த்தக்குளங்களுக்கும் பாதாள கால்வாய் வழியாக தண்ணீர் சென்று நிரம்பும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் பாதாள கால்வாயில் அடைப்பு ஏற்பட்டது. ஏரியில் இருந்து குளத்திற்கு வரும் மதகு திறப்பதில்லை. இதனால் எப்போதும் நிரம்பி வழியும் குளம் 12 ஆண்டுகளுக்கு பிறகு வறண்டது. தற்போது புராதான நகர மேம்பாட்டு நிதியில், புனரமைப்பு என்ற பெயரில் குளம் தன் பொலிவை இழந்து அலங்கோலமாக காட்சியளிக்கிறது. ஏரியில் இருந்து தெப்பக் குளத்திற்கு வரும் பாதாள கால்வாய் மதகு திறக்க முடியவில்லை. ஏரி நிரம்பியுள்ள நிலையில் குளம் பொலிவை இழந்து தண்ணீரின்றி இருப்பது மக்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது. குளத்தை சீரமைத்து, பாதாள கால்வாய் அடைப்பை சீரமைத்தால் தெப்பக்குளம் ஏரியை போல் நீர் நிரம்பி ரம்யமாக காட்சியளிக்கும். இதனால் நகரில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வறட்சி நீங்கும். புராதான நகர மேம்பாட்டு பணியை மேற்பார்வையிடும் அதிகாரி தெப்பக் குளத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் .

## <u>பனங்கிழங்கு சீசன் துவக்கம்</u>

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை பகுதியில் பனங்கிழங்கு விற்பனை மும்முரமாக நடக்கிறது. மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை , வளத்தி சுற்றுப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பனை மரங்களிலிருந்து விழும் பழங்களை இரண்டு மாதங்களுக்கு முன் எடுத்து சேகரிக்கின்றனர். இந்த பழத்திலிருந்து கொட்டைகளை பிரித்து அப்படியே மண்கொட்டி மூடி வைக்கின்றனர். இதை அப்படியே இரண்டு மாதங்கள் வரை விட வேண்டும். பின், குறுத்து வெளியே தெரிந்த உடன் மண்ணை பிரித்து பார்த்தால் பனங்கிழங்கு முற்றிய நிலையில் காணப்படும். மண்ணிற்குள் இருக்கும் பனங் கிழங்குகளை தண்ணீரில் அலசி எடுக்கின்றனர். இந்த கிழங்குகளை 20 , 25 என்ற எண்ணிக்கையில் கட்டு கட்டி கடைவீதி யிலும், தெருக்களிலும் விற்கின்றனர். திருவண்ணாமலை போன்ற நகர்பகுதிகளுக்கு இதை எடுத்து சென்று அதிக விலைக்கு விற்பது அதிகரித்து வருகிறது.

## <u>மக்கும் குப்பையில் மண்புழு உரம்; நாமக்கல் நகராட்சி மீண்டும் துவக்கம்</u>

நாமக்கல் நகராட்சியில் உள்ள, 39 வார்டுகளில், 1.20 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். நகரில் தினமும் சேரும், 44 மெட்ரிக் டன் குப்பைகளை, நகராட்சி நிர்வாகம் சார்பில், சுகாதார பணியாளர்கள் சேகரித்து, கொசவம்பட்டியில், எட்டு ஏக்கரில் அமைந்துள்ள குடோனில் கொட்டி வந்தனர். அவற்றில், மார்க்கெட் கழிவு, பூக்கடை கழிவுகள் என, ஐந்து முதல், ஏழு டன் வரை உள்ள குப்பைகளை பயன்படுத்தி, மண் புழு உரம் தயாரிக்கப்பட்டு வந்தது. மேலும், மக்கும் குப்பைகள் மூலம், இயற்கை உரம் தயாரித்தும் விற்பனை செய்யப்பட்டது. இப்பணியை, டெண்டர் விடப்பட்டு தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டது.அவர்கள் முறையாக பணியை மேற்கொள்ள

வில்லை. இதனால், இயற்கை உரம் தயாரிக்கும் பணி முடங்கியது. நகராட்சி வார்டுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை, குடோனில் கொண்டு மலைபோல் கொட்டி குவித்து வருகின்றனர். குடோனில் எவ்வித பணியும் மேற்கொள்ளாததால், குப்பைகளை அரைப்பதற்காக அமைக்கப்பட்ட இயந்திரங்களும் பழுதடைந்து நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வந்தது. இதையடுத்து, மீண்டும் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்க, நகராட்சி நிர்வாகம் முடிவு செய்தது. இயற்கை உரம் தயாரிக்க போடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ததை தொடர்ந்து, சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தினர், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். சென்னை நீதிமன்றத்தில், நகராட்சி நிர்வாகம் ஒப்புதல் பெற்று, இயற்கை உரம் தயாரிக்கும் பணியை நேற்று துவங்கினர். அதற்காக, நான்கு லட்சம் ரூபாய் செலவு செய்து இயந்திரங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து, மண்புழு உரம் தயாரிக்கும் பணி துவங்கியது. நகராட்சி சேர்மன் கரிகாலன், கமிஷனர் அசோக்குமார் கூறியதாவது: மக்கள் தொகை அதிகரித்துள்ளதால், கூடுதல் உபகரணங்கள், மின்சாரம் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு, மதிப்பீடு தயாரித்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, பழைய குப்பைகளை, தரம் பிரித்து இயற்கை உரம் தயாரிக்கவும், குப்பைகளை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கவும், லாரி, குப்பை தொட்டி போன்ற உபரகணங்களுக்கு, 4.25 கோடி என, மொத்தம், 8.25 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு வழங்கினால், நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் விரைவாக செயல்படுத்த முடியும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## நாமகிரி பேட்டையில் ரூ. 40 லட்சம் மஞ்சள் ஏலம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 40 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. நேற்று நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 900 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,099க்கும், குறைந்த பட்சம், 6,199 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,690க்கும், குறைந்த பட்சம், 5,239 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 14 ஆயிரத்து, 139க்கும், குறைந்த பட்சம், 11 ஆயிரத்து 775 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 40 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், வரும் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. தர்மபுரி கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வரும், 19ம் தேதி, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது. இதில், தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்தும், மனுக்களாக வழங்கி பயன்பெறலாம் என, கலெக்டர் விவேகானந்தனர் தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளுக்கு சிறப்பு முகாம்

மஞ்சூர் : குந்தா வனத்துறை சார்பில் கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. கேரளாவில் பரவிய பறவை காய்ச்சல்

எதிரொலியாக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லையோர கிராமங்களில் தீவிர கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நீலகிரி தெற்கு வனக்கோட்ட அலுவலர் பத்ரசாமி உத்தரவின் பேரில், குந்தா வனச்சரகத்திற்கு உட்பட்ட எல்லையோர கிராமமான கிண்ணக்கொரையில் வனத்துறை சார்பில் கால்நடைகளுக்கான பறவை காய்ச்சல் மற்றும் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.குந்தா ரேஞ்சர் முத்து கிருஷ்ணன் துவக்கி வைத்தார். இதில், மேலூர் கால்நடை மருத்துவமனை உதவி மருத்துவர் கார்த்திக் தலைமையிலான மருத்துவ குழுவினர் கலந்துகொண்டு, மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளை போட்டனர். இதேபோல, ஆடுகள், பூனை, நாய், கோழி உள்ளிட்ட கால்நடைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகளுக்கு சினை பரிசோதனை, சினை ஊசி, குடற்புழு நீக்கம், கோழி கழிச்சல் உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்பட்டது. குறிப்பாக, கோழிகளுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை வனவர்கள் ரவி, சுந்தர்ராஜன் மற்றும் வனத்துறையினர் செய்திருந்தனர்.

## விவசாயிகள் சங்க கூட்டம்

துவரங்குறிச்சி: மருங்காபுரி ஒன்றிய ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க கூட்டம் துவரங்குறிச்சியில் நடந்தது. மருங்காபுரி ஒன்றிய தலைவர் சுந்தர்ராஜ் தலைமை வகித்தார். பொருளாளர் சொக்கலிங்கம், மண்ணச்சநல்லூர் ஒன்றிய துணைத்தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் சிதம்பரம் வரவேற்றார். மாநில தலைவர் விஸ்வநாதன் பேசினார். தொடக்க கூட்டுறவு வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில், யூரியா வாங்கச்செல்லும் விவசாயிகளுக்கு, கடன் பெற்றவர்களுக்கு மட்டுமே யூரியா வழங்கப்படும், என கூறுவதை தவிர்க்க வேண்டும். வளநாடு ஏரி,

செவல்பட்டி ஏரி, ஆலம்பட்டி புதுக்குளம், மேலூர் பட்டவர்த்தி குளம் உள்ளிட்ட இப்பகுதியிலுள்ள குளங்களின் வரத்து வாரிகளை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. செவல்பட்டி கிளை தலைவர் அடைக்கலம் நன்றி கூறினார்.

## <u>16,851 விவசாயிகளுக்கு ரூ. 90 கோடி பயிர்கடன்</u>

பெரம்பலூர்: தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் தரேஷ் அஹமது தலைமையில் நடந்தது. கூட்டத்தில் அவர் பேசியதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில், 167 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள, 65,741 பால் உற்பத்தியாளர்களிடமிருந்து, நாள் தோறும் ஒரு லட்சத்து, 22 ஆயிரத்து, 895 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதை, இரண்டு லட்சம் லிட்டராக உயர்த்த அனைத்து பால் உற்பத்தியாளர் சங்க செயலர்களும் உரிய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். 2014- 2015ம் ஆண்டில் கூட்டுறவு துறை மூலம், இதுவரை, 16,851 விவசாயிகளுக்கு, பயிர்க்கடனாக, 90 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவமுத்துகுமார சுவாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, ஆவின் மேலாளர் (திருச்சி) நாகராஜன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## <u>விவசாயிகளுக்கு வேளாண் விருது</u>

திண்டுக்கல் : இயற்கை விவசாயத்தின் மூலம் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வனவியல் பயிர்களுடன் கால்நடைகளை வளர்த்து ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தற்கான விருது விவசாயி செந்தில்குமாருக்கு வழங்கப்பட்டது. நிலக்கடலை பயிரில் அதிக

மகசூலை பெற்ற விவசாயி திருப்பதிக்கு விருதுக்கான காசோலையை வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் வழங்கினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் பாஸ்கரன், மாநில திட்ட வேளாண் துணை இயக்குனர் தங்கசாமி, மத்திய திட்ட வேளாண் துணை இயக்குனர் அருள்அரசு மற்றும் வேளாண் மை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## <u>தோட்டக்கலை பயிர் விவசாயிகளுக்கு மானியம்</u>

ராமநாதபுரம் : ராமநாதபுரத்தில் தோட்டக்கலை பயிர் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த "பேக்கிங்' இல்லம் அமைக்க அரசு மானியம் வழங்கப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை "பேங்கிங்' செய்ய தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் ஒருங்கிணைந்த பேக்கிங் இல்லங்கள் அமைக்க 35 சதவீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. திட்டம் மூலம் 9க்கு 18 மீட்டர் அளவு பேக்கிங் இல்லம் அமைக்க ரூ.17.50 லட்சம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. இங்கு பயிர்களை தரம் பிரித்து பேக்கிங் செய்ய அனைத்து வசதிகளும் இருக்க வேண்டும். மாவட்டத்தில் இரண்டு பேக்கிங் இல்லம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மிளகாய், வெங்காயம், காய்கறிகள், பழங்களை தரம் பிரித்து பேக்கிங் செய்ய விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். பேக்கிங் இல்லம் அமைக்க விரும்பும் விவசாயிகள் வங்கி கடனுதவியுடன் கூடிய திட்ட மதிப்பீட்டுடன் வட்டார தோட்டக்கலை அலுவலர், தோட்டக்கலை துணை இயக்குனரை அணுகலாம் என, கலெக்டர் நந்தக்குமார் தெரிவித்துள்ளார்.

## <u>விவசாயிகள் கவனத்திற்கு</u>

ராமநாதபுரம் : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக வளாக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் திட்டம் டிச., 19 காலை 11:30 மணிக்கு நடக்கிறது.

விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று விவசாயம் குறித்து விவாதிக்கலாம் என, கலெக்டர் நந்தக்குமார் தெரிவித்துள்ளார்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் திட்டத்தில் இயந்திரம் வாங்க விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் கலெக்டர் தகவல்**

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கை: இயற்கை மனிதகுலத்திற்கு அளித்துள்ள அரிய வளங்களான நிலம் மற்றும் நீரை பாதுகாத்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகளை முனைப்புடன் காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை செய்து வருகிறது. வேளாண்மையில் இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் கூடுதலாக பண்ணை சக்தியை வழங்கிடவும், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையை ஈடுசெய்யவும், பணிகளை உரிய காலத்திில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியை பெருக்கிடவும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் படி விவசாயிகளுக்கு உழவு இயந்திரம், மண்தள்ளும் இயந்திரம், கதிர் அறுக்கும் இயந்திரம், பண்ணை கருவி வாங்குவதற்கு 50 சதவீத மானியம், அதிகபட்சமாக ரூ4 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நில மேம்பாட்டு திட்டம், சிறுபாசன திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம், சூரிய மின் இறைப்பான்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகவல், கல்வி பரிமாற்ற பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இரண்டாம் பசுமை புரட்சியை ஊக்குவிக்கும் வகையிலும், மின்சார சேமிப்பை அதிகரிக் கும் வகையிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 80 சதவீத மானியத்தில் விவசாய நிலங்களில் ஆழ்துளை

கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2014-15ம் ஆண்டில் நிறுவப்படும் 70 சூரிய இறைப்பான்கள் நன்னீர் பாசன அமைப்பை இணைத்து விவசாயிகள் வருமானத்தை மும்மடங்காக பெருக்க வழிவகை செய்யப்படுகிறது. எனவே, அரசின் மானியத்தை பெற்று விவசாயத்தை பெருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## <u>பென்னாகரம் அருகே 3 கன்றுகளை ஈன்ற பசு</u>

பென்னாகரம், : பென்னாகரம் அருகே பசு ஒன்று மூன்று கன்றுகளை ஈன்ற சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. பென்னாகரம் அருகே கொட்டாவூர் நான் காவது மைல் பகுதியை சேர்ந்தவர் கரியப்பன். விவசாயி. இவரது பசுமாடு நேற்று அதிகாலை 4 மணியளவில், 3 கன்றுகளை ஈன்றது. இந்த பசு இதற்கு முன்பாக 2 முறை ஒவ்வொரு கன்று களை ஈன்றுள்ளது. வழக்கமாக பசுக்கள் ஒரு கன்றை மட்டுமே ஈனும். ஆனால், இந்த பசு ஒரே சமயத்தில் மூன்று கன்றுகளை ஈன்றுள்ளது. இதில் 2 பெண் கன்றுகள், ஒரு ஆண் கன்று என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று கன்றுகளும் ஆரோக்கியமாக உள்ளது. பிறந்தவுடனேயே துள்ளிக்குதித்து விளையாடின. இச்சம்பவம் அப்பகுதி மக்களிடையே காட்டுத்தீயாய் பரவி யது. இதையறிந்த சுற்று வட்டார பகுதி பொது மக்கள் கரியப்பனின் வீட்டிற்கு வந்து பசுவையும், கன்றுகளையும் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

## <u>மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகம்</u>

ஈரோடு, : ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை தொடர்ந்து ஏறுமுகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஈரோடு அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் ஈரோடு செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் சாம்பிள்களை விவசாயிகள் வைக்கின்றனர். இவற்றை வியாபாரிகள் பார்வையிட்டு மஞ்சளின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்கின்றனர். கடந்த மாத இறுதி வரை ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.6500 முதல் ரூ.7

ஆயிரம் வரை விலை உயர்வதும், வீழ்ச்சியடைவதுமாக இருந்தது. ரூ.7 ஆயிரத்தை தாண்டி விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் காத்திருந்த நிலையில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ஒரு குவின் டால் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.7389க்கு விலை போனது. இந்நிலையில் நேற்று நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.7441க்கும், குறைந்தபட்சமாக ரூ.6339க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.6789க்கும், குறைந்தபட்சம் ரூ.5909க்கும் விலை போனது. வெளி மார்க்கெட்டை பொருத்தவரை விரலி மஞ்சள் அதிகபட்சமாக ரூ.7100க்கும், குறைந்தபட்சம் ரூ.3576க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6596க்கும், குறைந்தபட்சம் ரூ.3489க்கும் விலை இருந்தது. தொடர்ந்து மஞ்சள் விலை உயர்ந்து வருவது விவசாயிகள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.8 ஆயிரத்திற்கு மேல் விற்பனை ஆனால் தான் விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். நீண்ட இடைவெளிக்கு பிறகு இப்போது தான் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் ஒரு குவின்டால் மஞ்சள் ரூ.7 ஆயிரத்தை தாண்டியுள்ளது. அகில இந்திய அளவில் மஞ்சளுக்கு தேவை உயர்ந்திருப்பதால் மஞ்சள் விலை சற்று ஏற்றமடைந்துள்ளது. இதே விலை நீடித்தால் இந்த மஞ்சள் சீசனில் சாகுபடி செய்துள்ள மஞ்சளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கும் என எதிர்பார்க்கலாம் என்றனர். மஞ்சள் விலை உயர்வால் தமிழக, கர்நா டகா மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.11.94 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.11.94 லட்சத்திற்கு 185 குவின்டால் மஞ்சள் விற்பனை யானது. கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள், வியாழன்

தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் 128 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 57 குவின்டாலும் என மொத்தம் 185 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை சென்னூர், கருவலூர், கோவனூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,099 முதல் ரூ.7,009 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.5,700 முதல் ரூ.6,301 வரையும் விற்றது. இதன் மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.6,700. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.5,900. ஈரோடு, கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விற்பனை மொத்த மதிப்பு ரூ.11.94 லட்சம். இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.4.57 லட்சம் அதிகமாகும். அதே போல், விரலி மஞ்சள் சராசரி விலை குவின்டாலுக்கு ரூ.500 அதிகரித்துள்ளது. கிழங்கு மஞ்சள் ரூ.100 குறைந்துள்ளது. விரலி மஞ்சள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## ரூ.30 லட்சம் நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், : அவினாசி அருகே சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று நடந்தது. ஏலத்துக்கு, 2100 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. சென்ற வாரத்தைவிட நிலக்கடலை வரத்து அதிகரித்து இருந்தது. ஏலத்தில், குவிண்டால் ஒன்றுக்கு (காய்ந்த) முதல் ரக நிலக்கடலை ரூ.3750 முதல் ரூ.4000 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ.3440 முதல் ரூ.3700 வரையிலும், பச்சை நிலக்கடலை ரூ.3000 முதல் ரூ.3320 வரையிலும் ஏலம் போனது. மைசூர், தெங்குமராட்டா, குன்னத்தூர், ராயர்பாளையம், லூர்துபுரம், மங்கரசவலையபாளையம், போத்தம்பாளையம், புலிப்பார், அவினாயிபுதூர், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், அன்னூர்

பகுதிகளில் இருந்து 471 விவசாயிகளும், 12 வியாபாரிகளும் பங்கேற்றனர். சேவூரில் மொத்தம் ரூ.30 லட்சத்துக்கு நிலக்கடலை ஏல வர்த்தகம் நடந்தது. சேயூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலை வரத்து அதிகரித்தது. இதனால், விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

**<u>உவர்நீர் பண்ணை குட்டைகளில் வனாமி இறால் வளர்ப்பு சீர்காழியில் 18ம்தேதி கருத்தரங்கம்</u>**

நாகை, : நாகை மாவட்டம் சீர்காழியில் வனாமி இறால் வளர்ப்பு கருத்தரங்கம் வரும் 18ம்தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து நாகை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்கக இயக்குனர் முனை வர் ரத்னகுமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: காவிரி டெல்டா மாவட்டங்களான நாகை, திருவாரூர், தஞ்சை ஆகிய மாவட்டங்களில் பண்ணைக்குட்டை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் வறட்சி காலங்களில் நீர் தேவையை பூர்த்தி செய்ய நீரை சேமித்து வைக்கும் அமைப்பாக மட்டும் பண்ணைக் குட்டைகள் இல்லாமல் கூடுதல் வருமானம் ஈட்ட பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. மீன் வளர்ப்பு மட்டுமின்றி அதிக விலைக்கு விற்க கூடிய வனாமி இறால்களையும் விவசாயிகள் தங்கள் பண்ணைக்குட்டைகளில் பாரம்பரியமான முறையில், குறைவான இருப்பிடத்தில் இருப்பு வைத்து வளர்ப்பதால், மீன்வளர்ப்பு மற்றும் விவசாயத்தை விட கூடுதல் லாபம் பெற முடியும். நாகை மாவட்டத்தில் உள்ள பண்ணைக்குட்டை விவசாயிகள் பனன்பெறும் வகையில், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் சார்பில் சீர்காழியில் வருகிற 18ம்தேதி, குறை உவர்நீர் பண்ணைக்குட்டைகளில் வனாமி இறால் வளர்ப்பு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. விவசாயிகள் அனைவரும் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறலாம். கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள், தொழில் முனைவோர் நாகை

முதலாவது கடற்கரை சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் விரிவாக்க கல்வி இயக்கக இயக்குனர் அலுவலகத்தையோ, ரிலையன்ஸ் அறக்கட்டளையையோ கட்டணமில்லா தொலைபேசி 1800 419 8800 அல்லது 8754541046 ஆகிய எண்களையோ, தஞ்சாவூர் சூரக்கோட்டையில் உள்ள மீன்வள விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் முனைவர் செந்தில்குமாரை நேரிலோ அல்லது 04362 291625 என்ற தொலைபேசி எண்ணையோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு நாகை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்கக இயக்குனர் ரத்னகுமார் தெரிவித்து உள்ளார்.

## சொட்டுநீர்பாசனம் அமைக்கமானியம் வேளாண்துறை தகவல்

பழநி, : சொட்டு நீர் பாசனம் அமைக்க 65% மானியம் வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பழநி வட்டாரத்தில் மக்காச்சோளம், கரும்பு, பருத்தி மற்றும் பயிறு வகைகள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. பாசன நீர் மற்றும் கூலியாட்கள் தட்டுப்பாடு நிலவுகிறது. இப்பிரச்னைகளை சமாளிப்பதற்கு சொட்டு நீர் பாசனம் ஏற்ற வழியாகும். எனவே, விவசாயிகளின் வசதிக்காக வேளாண்மைத் துறை மூலம் கரும்பு, தென்னை போன்ற பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. பழநி, பாப்பம்பட்டி, காவலப்பட்டி, நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள உதவி வேளாண் அலுவலர்களையோ, வேளாண்துறை அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம். மேலும் கூடுதல் விபரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ, வேளாண்மை அலுவலரையோ அணுகலாம். விவசாயிகள் அமைக்கும் சொட்டுநீர் பாசன முறையை பொறுத்து 65% வரை மானியம் வழங்கப்படும் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# பரமக்குடி பகுதியில் வரத்து குறைவால் மிரட்டும் மீன் விலை

பரமக்குடி, :ராமேஸ்வரம் பகுதியில் அடிக்கடி ஏற்படும் கடல் சீற்றம் காரணமாக பரமக்குடிக்கு மீன்வரத்து குறைந்துள்ளது. நாட்டுப்படகு களில் கொண்டு வரப்படும் மீன்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதால் அசைவ பிரியர்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். பரமக்குடி நகர் பகுதிக்கு தினந்தோறும் ராமேஸ்வரம், மண்டபம், பாம்பன், வாலிநோக்கம், முந்தல் பகுதிகளிலிருந்து மீன்கள் விற்பனைக்கு வருகின்றன. பரமக்குடியில் உழவர்சந்தை, பஜார் கடை வீதி என 5க்கும் மேற்பட்ட திறந்தவெளி மீன் மார்க்கெட்கள் உள்ளன. புயல் மையம் கொண்டதன் காரணமாக கடந்த சில வாரங்களாக வங்க கடல் சீற்றத்துடனேயே காணப்படுகிறது. இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதன் எதிரொலியாக பரமக்குடி நகர் பகுதிக்கு மீன் வரத்து குறைந்தது. தற்போது கடல்சீற்றம் குறைந்துள்ளதால் மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்கு சென்று வருகின்றனர். நாட்டுப்படகில் குறைந்த அளவு மீன்களே வருவதால், பரமக்குடி நகர் பகுதியில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. அசைவ பிரியர்கள் வேறு வழியில்லாமல் கூடுதல் விலை கொடுத்து அதிருப்தியுடன் மீன்களை வாங்கி செல்கின்றனர். மீன் மார்க்கெட்டில் விலைமீன், கிளைக்கான், மாவுளா போன்ற மீன்கள் கிலோ ரூ.250க்கும், முரல் மீன் கிலோ ரூ.200 வரையிலும், கும்ளா மீன் ரூ.150 வரையிலும், நண்டு அதிகபட்சமாக ரூ.500 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பரமக்குடி பகுதி மக்கள் கூறுகையில், "நாட்டுப்படகில் கிடைக்கும் மீன்களை வியாபாரிகள் கூடுதல் விலைக்கு விற்கின்றனர். விலை அதிகம் என்பதால் மீன் வாங்க முடியவில்லை. கார்த்திகை, மார்கழி மாதம் என்பதால் மீன் விலை குறையும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், இந்த விலை உயர்வு ஏமாற்றம் அளிக்கிறது" என்றனர். வியாபாரிகள் கூறுகையில், கடல்சீற்றம் காரணமாக மீன் வரத்து

குறைந்துள்ளது. இதனால் விலை உயர்ந்துள்ளது. கார்த்திகை மாதம் எப்போதும் மீன் விலை குறைந்து காணப்படும். விற்பனையும் குறைவாக இருக்கும். அசைவ விரும்பிகள் மட்டும் விலை குறைவை பயன்படுத்தி அதிக அளவு வாங்கி செல்வர். தற்போதைய விலை ஏற்றத்தால் அவர்களும் மீன் வாங்குவதை குறைத்துள்ளனர் என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கடலோர மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலைமையம்தகவல்</u>**

சென்னை, வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடலோர மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும் என்று சென்னை வானிலைஆய்வுமையம்தெரிவித்துள்ளது.

காற்றழுத்ததாழ்வுநிலை

அந்தமான் அருகில் நேற்று முன்தினம் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை மைய ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:- அந்தமான் அருகே நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுநிலை, நேற்று மேற்கு நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது அந்த காற்றழுத்த தாழ்வுநிலை வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் நிலைகொண்டுள்ளது.

கடலோரமாவட்டங்களில்...

இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (அதாவது இன்று), தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். சென்னையை

பொறுத்தவரையில், வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில்பெய்தமழைஅளவுவருமாறு:-

சிதம்பரம், மாதவரம், புதுச்சேரி ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ., சென்னை டி.ஜி.பி. அலுவலகம், பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக அண்ணாமலைநகரில் 23.20 மில்லி மீட்டர் பதிவு

கடலூர், கடலூர் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக அண்ணாமலைநகரில் 23.20 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

### வடகிழக்கு பருவ மழை

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை முன்கூட்டியே தொடங்கி பெய்து வருகிறது. இதற்கிடையில் வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வந்தது. இந்த மழையினால் மாவட்டத்தில் ஏரிகளான வீராணம் ஏரி, பெருமாள், வாலாஜா ஏரிகள் நிரம்பியது. இதேபோல் குளம், குட்டைகளும் நிரம்பியது. ஆனால் கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் மழை இல்லை. வெயில் வாட்டி வதைத்து வந்தது. சில நேரங்களில் பகலில் கடும் வெயிலும், மாலை நேரத்தில் பனியும் பெய்தது. இந்த சீதோஷ்ண நிலை மாற்றத்தினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இது தவிர வெயில் அடிக்க தொடங்கியதால் ஏரிகளில் நீர் மட்டமும் படிப்படியாக குறைய தொடங்கியது.

### பரவலாக மழை

இந்நிலையில் 3 நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் மட்டும் லேசான சாரல் மழை பெய்து வந்தது. நேற்று மாவட்டத்தின் தலை

நகரான கடலூரில் மாலை நேரத்தில் மட்டும் சாரல் மழை பெய்தது. அதன்பிறகு மழை இல்லை. ஆனால் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி, பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் கன மழை பெய்தது.
இந்த மழையினால் தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கியது. முக்கிய சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. நேற்றும் மழை பெய்தது. கடலூரில் நேற்று 7.30 மணிக்கு லேசான சாரல் மழை பெய்தது. பிறகு இரவு 8.30 மணிக்கு கன மழை பெய்தது. இந்த மழையினால் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்ற மாணவ– மாணவிகள் நனைந்தபடி சென்றனர். ஒரு சிலர் குடை பிடித்தபடியும், மழை கோட்டு அணிந்தபடியும் சென்றதை காண முடிந்தது. இந்த மழையினால் முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அண்ணாமலைநகரில் 23.20 மில்லி மீட்டர்

மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அண்ணாமலைநகரில் அதிகபட்சமாக 23.20 மில்லி மீட்டர் மழையும், குறைந்த பட்சமாக புவனகிரியில் 2 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் விவரம் வருமாறு:– சிதம்பரம் – 15.40, பரங்கிப்பேட்டை – 8, காட்டுமன்னார்கோவில் –5.

**கே.ஆர்.பி. அணையின் உபரி நீர் திறப்பு: காரிமங்கலம் பகுதியில் ஏரிகள் நிரம்பின விவசாயிகள் மகிழ்ச்சி**



கே.ஆர்.பி.அணையில் இருந்து திறந்து விடப் பட்ட உபரி நீரால் காரிமங்கலம் பகுதி யில் உள்ள ஏரிகள் நிரம்பின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

உபரிநீர்திறப்பு

தர்மபுரி மாவட்டம் காரி மங்கலம் பகுதியில் கும்பார அள்ளி,

பந்தாரஅள்ளி மற்றும் திண்டல் ஆகிய வருவாய் கிராமங்களுக்குட்பட்ட கொள்ளுப் பட்டி, ராமாபுரம், திண்டல், பந்தாரஅள்ளி, சவுளுப்பட்டி மற்றும் கரகத அள்ளி ஆகிய கிராமங்களில் 7 பெரிய ஏரிகள் உள்ளன. மேலும் காரிமங்கலம் பெரிய ஏரி, குட்டூர் ஏரி, வண்ணான் ஏரி, மோட்டுப்பட்டி ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகள் மூலம் சுற்று வட்டாரத்தை சேர்ந்த 2 ஆயிரத்து 400 ஹெக்டர் விவசாய நிலம் பாசன வசதி பெற்று வந்தது. இந்தநிலையில் கடந்த சில வருடங்களாக இந்த பகுதியில் பருவ மழை பொய்த்து போனதால் இந்த ஏரிகள் தண்ணீர் இன்றி வறண்டது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கே.ஆர்.பி. அணையில் இருந்து திறந்து விடப்படும் உபரி நீரை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர். மேலும் கே.ஆர்.பி. அணையில் இருந்து திறந்து விடப்படும் உபரி நீரை காரிமங்கலம் பகுதிகளில் உள்ள திண்டல் ஏரி வரை நீட்டிக்க வேண்டும் என்று விவசாயிகள், பொது மக்கள் கோரிக்கைவிடுத்தனர்.

ஏரிகள்நிரம்பின

அதனை தொடர்ந்து கே.ஆர்.பி. அணையின் வலது புற கால்வாயில் தண்ணீர் திறந்து விட மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. அதன்பேரில் கே.ஆர்.பி. அணையின் வலது புற கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் கும்பாரஅள்ளி, ராமா புரம், காரிமங்கலம், பெரிய ஏரி, குட்டூர் ஏரி, வண்ணான் ஏரி உள்ளிட்ட பெரும்பாலான ஏரிகளுக்கு தண்ணீர் வரத் தொடங்கினர். தற்போது இந்த ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக வறண்டு கிடந்த ஏரிகள் நிரம்பி வருவதால் பார்ப்பதற்கு ரம்மி யமாக காட்சி அளிக்கிறது. மேலும் ஏரிகள் உள்ள பகுதிகளில் நீர்நிலைகள், கிணறு களில் நீர்மட்டம் உயரத் தொடங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் அவர்கள் விவசாய தொழிலை தொடங்கி உள்ளனர்.

## பண்ணைக்குட்டைகளில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு



ராமநாதபுரம் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் இதுவரை 1800க்கும் அதிகமான பண்ணைக்குட்டைகள் அமைக் கப்பட்டுள்ளன. சமீபத்தில் பெய்துள்ள பருவமழையின் காரணமாக பண்ணைக்குட்டைகளில் நீர் நிரம்பியுள்ளன. இவற்றில் மீன்குஞ்சுகள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. தற்போது கடலாடி வட்டாரத்தில் 31 பண்ணை குட்டை களுக்கு மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல தனிச்சியம், கொத்தங்குளம் நீர்வடிப்பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட அலுவலர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் துணை இயக்குனர் கமாலுதீன் முன்னிலையில் பண்ணைக்குட்டை பயனாளிகளுக்கு மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டன. பருவமழை பொய்த்துப்போகும் காலங்களில் பண்ணைக் குட்டை களில் மீன் வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் விவசா யிகளின் வாழ்வாதாரத்துக்கு பெரிதும் உதவியாக இருக்கும். ஒரு பண்ணைக் குட்டையில் இருந்து ரூ.40,000 முதல் ரூ.50,000 வரை வருமானம் ஈட்டலாம். எனவே விவசாயிகள் தங்களது பண்ணைக்குட்டைகளில் மீன் குஞ்சுகள் வளர்த்து பயனடையுமாறு வேளாண் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## உத்தமபாளைத்தில், வேளாண்மைத்துறை சார்பில் 240 மெட்ரிக் டன் உயிர் உரம் தயாரிப்பு அதிகாரிகள் தகவல்



உத்தமபாளையம் உத்தமபாளையத்தில் வேளாண்மைத்துறை சார்பில் உயிர் உரம் தயாரிக்கும் மையத்தில் இந்த ஆண்டு 240 மெட்ரிக்டன் உரம் தயாரிக்கப்பட்டது.

<u>உயிர் உரங்கள் தயாரிக்கும் மையம்</u>

நெல், வாழை, நிலக்கடலை, பயறு வகைகள் உள்ளிட்ட பயிர் சாகுபடிக்கு உயிர் உரங்கள் மிகவும் அவசியமாக உள்ளன. பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்பைரில்லம், ரைசோபியம் உள்ளிட்ட உயிர் உரங்கள் தயாரிக்க தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் வேளாண்மைத்துறை சார்பில் உயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த மையம் 2011–ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. தென்மாவட்டங்களில் தூத்துக்குடியை அடுத்து உத்தமபாளையத்தில் தான் உயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைக்கப்பட்டு உள்ளது. இங்கு 5 வகையான உயிர் உரங்கள் தயாரிக்கப்பட்டு தேனி, திண்டுக்கல், மதுரை, கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள வட்டாரவேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கு மானிய விலையில் விவசாயிகளுக்கு உரங்கள் வினியோகம் செய்யப்படுகிறது.

<u>240 மெட்ரிக் டன்</u>

இதுகுறித்து, உத்தமபாளையம் வேளாண்மை அலுவலர்கள் பாண்டி, ரேணுகா ஆகியோரிடம் கேட்ட போது, அவர்கள் கூறியதாவது:–

உயிர் உரங்கள் என்பது விளைநிலங்களில் மண் வளத்தைப் பெருக்கும் உயிருள்ள நுண்ணுயிர்கள் ஆகும். பொதுவாக நுண்ணுயிர் உரங்கள் தழைச்சத்து அளிக்க கூடியது. மேலும் மணிச்சத்தை கரைக்கக்கூடிய பொட்டாசியம், துத்தநாகம் போன்ற சத்துக்களை பயிர்களுக்கு தரக்கூடிய பாக்டீரியாக்கள், பாசிகள் பூஞ்சைகள் உள்ளடக்கியதாகும். இந்த மையத்தின் மூலம் உயிர் உரங்களை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு எளிதாக விவசாயிகளுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டு

வருகிறது. மேலும் மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளை அதிகரித்து மண்வளத்தை பெருக்கி வருகிறோம். ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து பயிர் உற்பத்தி செலவை குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. குறிப்பாக சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், நிலையான விவசாயத்திற்கு வழிவகை செய்வது தான் எங்களின் நோக்கம். இந்த ஆண்டு 240 மெட்ரிக் டன் உயிர் உரங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளது. தேவையான அளவு உரங்கள் இருப்பில் உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உயிர் உரங்கள் தேவைப்பட்டால் உத்தமபாளையத்தில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலகத்தை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.